ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# திருக்குறுங்குடி ஸ்ரீ ஸ்ரீ ஒன்றான பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி - வருஷதிருநட்சத்திரம் - சித்திரை – திருவோணம்



வர்த்தமான ஸ்ரீபேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி
புகைப்பட உதவி : ஸ்ரீ சுதர்சனம் ஸ்வாமி, திருவல்லிக்கேணி

## நித்யதனியன்

லக்ஷ்மி நாதாதி பூர்ணார்ய யதீந்த்ராவதி ஸம்ஸ்ரயம் /
ததீய கருணா பாத்ரம் ராமானுஜ முநிம் பஜே: //

## திருநக்ஷத்திர தனியன்

சைத்ராக்க்யமாஸி மதுஸூதநதாரஜாதம்
ராமாநுஜாஹ்வ யதிவர்ய கடாக்ஷபாத்ரம் /
ஸ்ருத்யந்தயுக்ம விஸதீகரணப்ரவீணம்
ஶ்ரீ பூர்ணநாமமுநிவர்யமஹம் பஜாமி //

சைத்ரே ஸ்ரவண ஸஞ்ஜாதம் ராமாநுஜபதாஶ்ரிதம் /
மஹாக்ருபாவந்நாமாநம் குருங்கமுநிமாஶ்ரயே //

## வாழித்திருநாமம்

சீராரும் செங்கமலச் சேவடிகள் வாழி
திருவரையிற் சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் திருமார்பில் முந்நூலும் வாழி
எதிராசரருளிய சீர் முக்கோலும் வாழி
தாராருஞ் சங்காழித் தடந்தோள்கள் வாழி
தடமலர்க்கண்ணினை யொளிரும் முகச்சோதி வாழி
ஆரார்வத்தழகு சிங்கர் அடி தொழுவோன் வாழி
அருள் புரியும் குறுங்கை முனி அனவரதம் வாழியே.

ஆராமம் சூழ் குறுங்கை ஆளவந்தோன் வாழியே
அழகார் சித்திரை யோணத்தவதரித்தான் வாழியே
பாராரும் பதின்மர் பதம் பணிந்துய்ந்தோன் வாழியே
பாடியத்தினுட்பொருளைப் பகர்ந்தளிப்போன் வாழியே
சீராருங் குறுங்கைநம்பி திருவருளோன் வாழியே
செல்வ நாரணன் சேவை செய்துகப்போன் வாழியே
ஏராரும் எதிராசர் இணையடியோன் வாழியே
எந்தை பேரருளாள மாமுனிவன் (பேரருளாளமுனி) இணையடிகள் வாழியே.

## நாள் பாட்டு

நீரார் செஞ்சடையானொடு பங்கயன் நின்று பணிந்திடு நாள்
நிதமுழல் பாமரர் பாகவதோத்தமர் நீர்மை பொருந்திடு நாள்
பாரார் செந்தமிழ் மாமறைபயில்வோர் பரிதியெனத்திகழ் நாள்
பரமதகுஞ்சர பஞ்சானனமாய்ப் பாரில் விளங்கிடு நாள்
சீரார்குறுங்குடி மாநகர்நம்பியும் தேசுபொலிந்திடு நாள்
சிறந்த பெரும்பூதூர்முனி வன்புகழ் சேர்ந்துவிளங்கிடு நாள்
பேரருளாள ராமாநுஜ ஜீயரின் பெருமைவிளங்கிடு நாள்
பிறங்கியமேடந் திகழ்திருவோணப் பேர்பெறு திருநாளே.

## ஸ்ரீமத் பரமஹம்ஸ இத்யாதி ஒன்றான ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி வைபவம்

### திருக்குறுங்குடி நம்பி மற்றும் எம்பெருமானாரின் அவதார மகிமை

வைகுந்த வாழ்க்கையையுடைய ஸர்வேஸ்வரன் லீலாவிபூதியிலுள்ள ஜகல ஜீவாத்மாக்களும் நோவுபடுகிறதை கண்டு அவர்களை உஜ்ஜீவிக்கத் திருவுள்ளம் கொண்டு குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் என்றும் தாய் வாயில் கொக்கின்பிள்ளை வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே என்றும் நம்பியைத் தென்குறுங்குடி நின்ற அச்செம்பொனேதிகழும் திருமூர்த்தியை என்றபடி தென்குறுங்குடியில் விபவலாவண்ய பூர்ணத்வத்துடன் நித்யவாசமாய் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறான்.




திருக்குறுங்குடி நம்பி

த்ரிகாலஞானியான ஸ்ரீசுகப்ருஹ்மரிஷி ஸ்ரீமத்பாகவதத்தில் நாராயண பராயணர்களான ஆழ்வார் போல்வார்கள் அவதரிக்கப் போகிறார்கள் என்று சூசிப்பித்து அருளியுள்ளார். ஸ்ரீஸ்வாமி நம்பியே தாம்பரபர்ணீ நதி தீரத்தில் ஸ்ரீஸ்வாமி ஆழ்வாராக அவதரித்து, கலியும் கெடும் கண்டு கொண்மின் என்று பவிஷ்யத்தான விஷயத்தை கண்டு பேசினபடி ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் போல்வார்கள் அவதரித்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்பரதாயத்தை பரவச் செய்யப்போகிறார்கள் என்று சூசிப்பித்து நாதமுனிகளிடம் அருளினார் நம்மாழ்வார்.



நம்மாழ்வார் - திருக்குருகூர் - அவதாரஸ்தலம்
புகைப்பட உதவி – வானமாமலை ஸ்ரீ பத்பநாபன் ஸ்வாமி




ஸ்வாமி எம்பெருமானார், ஸ்ரீபெரும்புதூர்

எம்பெருமான் நியமனப்படி திருவனந்தாழ்வான் பூதபுரி என்ற ஸ்ரீபெரும்பூதூரில் கலௌராமானுஜோ முநி: என்ற திருநாமத்துடன் அவதாரம் செய்து ஸகல வேத பராங்கதராய் வேதவேதாந்தங்கள் கற்று விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவராய் விளங்கினார். கச்சி தேவாதி தேவனான பேரருளானிடம் தூர்யாஸரமம் (ஸந்யாஸாஶ்ரமம்) பெற்றுக் கொண்டார். அப்பெருமானும் அவருக்கு யதிராஜர் என்னும் திருநாமத்தை அளித்தான்.

ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் திவ்யதேசங்கள் தோறும் எழுந்தருளி மங்களாசாசனம் செய்து கொண்டு ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்தை ப்ரபலமடையச் செய்து வந்தார்.

பெருவிசும்பருளும் பேரருளாளன் பத்ரிகாஸ்ரமத்தில் தானே ஆசாரியனுமாயும் தானே சிஷ்யனுமாய் இருந்து கொண்டு மந்த்ரோபதேசம் செய்தருளினாப்போலே, திருக்குறுங்குடிக்கு எழுந்தருளின ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் பேரருளாளனான ஸ்ரீநம்பியை ஸச்சிஷ்யனாகக் கொண்டு மந்த்ரோபதேசம் செய்து ஸ்ரீவைஷ்ணவ நம்பி மற்றும் ஸ்ரீராமானுஜ நம்பி என்னும் தாஸ்ய நாமங்களை ப்ரஸாதித்து அருளினார். ஸ்ரீஸ்வாமி நம்பியும் தந்யோஸ்மி என்றும் நாம் நம் ராமானுஜனையுடையோம் என்றும் அருளினார். ஆனதுபற்றியே இத்திவ்யதேசம் தக்ஷிண பத்ரி என்ற திருநாமமாயிற்று.

ஸ்ரீஸ்வாமி நம்பி எம்பெருமானாரின் சிஷ்யனான வடுக நம்பி வேஷத்தில் எம்பெருமானாரின் பக்கல் எழுந்தருளி அவர் திருக்கையாலே திருமண் காப்பு சாத்திக் கொண்டு எழுந்தருளினது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பரதாயத்தில் மிகவும் ப்ரஸித்தம்.
(இதன் விரிவான வரலாற்றை வடுகநம்பி வைபத்தில் படித்து தெரிந்து கொள்ளலாம்)



இராமானுஜருக்கு, திருக்குறுங்குடி நம்பி
சிஷ்யனாய் வந்து கைங்கர்யம் செய்தல்.

எம்பெருமானார் கொஞ்சகாலம் வைஷ்ணவ வாமனத்தில் ஸ்ரீநம்பியை மங்களாசாஸனம் செய்து கொண்டு, கைங்கரியங்கள், நிர்வாகங்கள் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ நம்பியின் நியமனத்தின் பேரில் பெரிய நம்பி வம்சத்தில் **பூர்ணாசாரியர்** என்றவருக்கு தூர்யாஸரம (ஸந்யாஸாஶ்ரமம்) ஸ்வீகாரம் செய்து வைத்து **பேரருளாள ராமானுஜ ஜீயர்** என்ற திருநாமத்தையும் அருளி ஸ்ரீவைஷ்ண சம்ரதாயத்தையும் தர்ஸன ப்ரவர்த்தகத்தையும் ஸ்ரீஸ்வாமி நம்பி சன்னதி கைங்கரிய நிர்வாகங்களையும் செய்து வரும்படி அருளினார் என்பது நமது சம்பிரதாயத்தில் ப்ரஸித்தம்.

திருமங்கையாழ்வார் **பேரருளாளன்** (பெரிய திருமொழி 9-5-4 பாசுரம் – பேரருளாளன் பெருமை பேசி, மற்றும் பெரிய திருமொழி 9-5-10 பாசுரம் – பேரருளாளன் பெருமைபேசக் கற்றவன்) என்று மங்களாசாஸனம் செய்யப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ நம்பி எழுந்தருளியிருக்கிற வாமனகுடியிலும், ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்புல்லாணி, திருக்குருகூர், ஸ்ரீவைகுண்டம், வேதபுரி மன்னார் கோயில் முதலான திவ்யதேசங்களில் பெரியநம்பி திருவம்சத்தவர்கள் எழுந்தருளியிருப்பதையும் அதுதன்னிலும் வாமனகுடியில் ஸ்ரீநாதமுனி வம்சமான அரையர் ஸ்வாமிகளும், பெரிய நம்பி திருவம்சத்து ஸ்வாமிகளும் நிறைந்து வாசம் செய்தும், ஸ்ரீவைஷ்ணவ நம்பி சந்நிதியின் சகல கைங்கர்யங்களையும், நிர்வாகங்களையும் மேற்படி

வம்சத்தவர்களாலே நடந்து வருகிறதை மேற்படி பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி பார்த்தும், கேட்டும் மகிழ்ந்தும், பெரிய நம்பி வம்சத்தவர்களாலேயே ஸ்ரீநம்பி சந்நிதி கைங்கரியங்கள் யாவும் நடந்து வரவேண்டும் என்று தீர்மானித்து அருளி,

ராமாநுஷார்ய திவ்யாஞ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்

என்றபடியே 48வது பட்டம் **கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி** பரம்பரை வரையிலும் பெரிய நம்பி திருவம்சத்தவர்களாலே நடந்து வந்தது ஸகலரும் அறிந்ததே.



ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானாரும்
முதலாவது ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமியும்

எம்பெருமானார் ஆசாரியராக யாரை பற்றுவது என்கிற விசாரம் கொண்டு எழுந்தருளியிருந்தார். அதற்கு விடையாக ஆறாவது வார்த்தை தேவாதி தேவனால் திருக்கச்சி நம்பி மூலம் எம்பெருமானாருக்கு அருளிச்செய்யப்பட்டது. (ஆறாவது வார்த்தை – பெரிய நம்பியே ராமாநுஜரால் ஆசார்யராக ஆச்ரயிக்கத்தக்கவர்)

ஆறாவது வார்த்தையான பூர்ணாசார்ய ஸமாச்ரய: என்ற பதத்தை திருவுள்ளத்தில் கொண்டு தான், எம்பெருமானார் பெரிய நம்பியை ஆசாரியராகக் கொண்டு பஞ்ச சம்ஸ்காரம் முதலானதுகள் பெற்றுக் கொண்டார் என்று பெரியோர் பணிப்பர்.

எம்பெருமானார் திவ்ய தேசங்கள் எல்லாம் மங்களாசாஸனம் செய்து கொண்டு திருநாராயணபுரத்தில் திருநாரணன், செல்வநாரணன் என்ற செல்வப்பிள்ளையை மங்களாசாஸனம் செய்து கொண்டு எழுந்தருளியிருக்கும் போது செல்லப் பிள்ளையின் கைங்கரியத்துக்கு பெரிய நம்பி வம்சத்தில் ஒருவரை அனுப்ப வேணும் என்று ஸ்ரீபேரருளாள ராமானுஜஜீயருக்கு ஸ்ரீமுகம் அனுப்பினார். அதன்படி திருக்குறுங்குடியிலிருந்து பெரிய நம்பி வம்சத்து ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரை இந்த ஜீயர் மேல்கோட்டைக்கு அனுப்பினார்.

எம்பெருமானார் மிகவும் உகந்து அந்த ஸ்ரீவைஷ்ணவருக்கு திருக்குறுங்குடி தாஸர் என்ற அருளப்பாட்டுடன் செல்வ நாரணன் கைங்கரியத்தில் நியமனம் செய்தார். இன்றும் திருநாரயாணபுரத்தில் திருக்குறுங்குடி தாஸர் என்ற அருளப்பாட்டுடன் ஸ்ரீவைஷ்ணவர் கைங்கர்யம் செய்து வருவது யாவரும் அறிந்ததே.

எம்பெருமானார் ஸ்ரீ பெரிய நம்பியிடத்தில் பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொண்டார். எம்பெருமானார் பெரிய நம்பி வம்சத்து ஸ்ரீவைஷ்ணவரான பூர்ணாசாரியருக்கு துர்யாஸரம (ஸந்யாஸாஶ்ரமம்) ஸ்வீகாரம் செய்து வைத்து பேரருளாள ராமானுஜ ஜீயர் என்ற திருநாமத்தையும் சாத்தித்தார். அந்த பரம்பரையில் வரும் ஜீயர் ஸ்வாமியிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொள்வது மிகவும் உகந்தது.



அம்புவியோர் இத்தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்தார் என்றபடி, எம்பெருமானாரின் அபராவதரமான ஸ்ரீமத் வரவரமுனி, ஸ்ரீவைஷ்ணவ நம்பி என்ற தாஸ்ய நாமம் பெற்ற தென்குறுங்குடி பேரருளாளனை மங்களாசாஸனம் செய்ய திருவுள்ளம் கொண்டு 18ஆம் பட்டம் ஸ்ரீந்ருஸிம்ஹயோகி ஜீயர் ஸ்வாமி எழுந்தருளியிருந்த காலத்தில் வைஷ்ணவ வாமனத்துக்கு (திருக்குறுங்குடிக்கு) எழுந்தருளினார்.

ஸ்ரீநம்பியை மங்களாசாஸனம் செய்தருளிக் கொண்டும், க்ரந்த காலக்ஷேபங்கள் சாதித்துக் கொண்டும் சில நாட்கள் மாமுனிகள் அங்கு எழுந்தருளி இருந்தார்.

18ஆம் பட்டம் ஸ்ரீந்ருஸிம்ஹயோகி ஜீயர் ஸ்வாமி சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் (திருவாய்மொழி பாசுரம்) என்றபடி தளர்ச்சி அடைந்தார். மாமுனிகள் தன் அந்தரங்கரான திருவேங்கட தாஸர் என்ற ஸ்ரீவைஷ்ணவருக்கு 19வது பட்டமாக ஆஸ்ரம ஸ்வீகாரம் ஸ்ரீந்ருஸிம்ஹயோகி ஜீயர் ஸ்வாமியைக் கொண்டு செய்து வைத்து, விஷ்ணுசித்த ஜீயர் ஸ்வாமி என்ற திருநாமம் சாத்தி அனுக்ரஹித்தும், சில நாட்கள் க்ரந்த காலக்ஷேபங்கள் சாதித்துக் கொண்டும் இருந்தார். பின்பு ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார் திருமாளிகைக்கு ஸ்ரீமணவாள மாமுனிகள் எழுந்தருளினார்.

இவ்வாறாக எம்பெருமானாராலும், மணவாளமாமுனிகளாலும் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருக்குறுங்குடி ஸ்ரீபேரருளாள ராமாநுஜ ஜீயர் மடம் இன்றும் பொலிவுடன் திகழ்ந்து விளங்குவது யாவரும் அறிந்ததே.

பொலிக பொலிக பொலிக !

மேலே கொடுத்துள்ள தனியன்களையும் , வாழித்திருநாமங்கள் , நாள் பாட்டு மற்றும் வைபவம் முதலானவைகளை அடியேனுக்கு கொடுத்து உதவிய திருக்குறுங்குடி வர்த்தமான 50வது பட்டம் ஸ்ரீஸ்ரீ பேரரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிக்கும் மற்றும் திருக்குறுங்குடி ஸ்ரீ உ.வே.திருநாராயண அய்யங்கார் ஸ்வாமிக்கும் (திருக்குறுங்குடி ஜீயர் மடத்தை முன்பு நிர்வகித்து வந்தவர்) நன்றி உறித்தாகுக.

ஒன்றான ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: க்ஷந்தவ்ய: